# முற்போக்கு சிந்தனைகளில் பெண் படைப்பாளர்கள்

***வீ. இராஜேந்திரன்***
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, தமிழாய்வுமையம்
ஸ்காட் கிருத்துவக்கல்லூரி (தன்னாட்சி)
நாகர்கோவில்

***அ.பாக்கியமுத்து***
நெறியாளர், தமிழ்த்துறை தலைவர்
திருவள்ளுவர் அறிவியல் மற்றும் கலைக்கல்லூரி
பாபநாசம், திருநெல்வேலி

**மலர்: 10**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2022**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5029

***ஆய்வுச்சுருக்கம்***

*நமது கலாச்சாரச் செயல்பாடுகள் அனைத்திலும் பெண் இரண்டாம் இடத்தில் உள்ளார். ஒரு சமூகம் எப்படியிருக்கும் என்பதன் கற்பனையிலும், அதனை உருவாக்கக் கையாள வேண்டிய நடைமுறைச் செயல்பாடுகள் யாவை என நிர்ணயிப்பதிலும் தான் 'பல்வேறு பெண்ணியக் கொள்கைகளும் வேறுபடுகின்றன. உலக முழுவதுமே பெண்ணடிமைத் தளம் நிலவுகிறது அதிலும் சாதியமைப்புடைய இந்திய சமூகத்தில் பெண்ணடிமைத்தனம் மிகமிக அதிகமாகவே இருந்திருக்கிறது இருபதாம் நூற்றாண்டில் சிவில் உரிமைக் குழுக்களால் பெண்களுக்கு வாக்குரிமை, பொருளாதார சமத்துவம் ஓரளவு கிடைத்துள்ளன. இந்தியவில் முதன் முதலில் சிர் திருத்த இயக்கங்களில் ராஜாராம் மோகன்ராய் போராடி அதற்கான இயக்கங்களை கொண்டுவந்தார். தேசிய போராட்டம் தீவிரம் அடைந்த காலத்தில் பெண்கள் சார்ந்த விழிப்புணர்சி ஏற்பட்டது தமிழ் இலக்கியங்களிலும் பெண்ணை அடிமைப்படுத்தியே இருந்துள்ளனர். சங்க காலத்திலும் பெண்ணடிமைத்தனம் வேரூன்றியிருந்ததை "வினையே ஆடவர்க்கு உயிரே" போற்ற பாடல்கள் மூலம் நாம் அறிந்திருக்கிறோம். இருபதாம் நூற்றாண்டில் நாவல்களில் பெரும்பாலும் பெண்கள் பாதுகாக்கப்படுபவள், வீட்டைப் பேணுபவள், தெய்வம் போன்றவள் என்று தான் படைக்கப்பட்டிருக்கிறாள் என்றும் பெண்ணெழுத்தில் தெரிவித்துள்ளனர்.*

***கலைச்சொற்கள்***

*முற்போக்குச் சிந்தனைகள், பெண்ணடிமைத்தனம், சமூகசீர்திருத்தங்கள், பெண்ணிய நோக்கம், பெண்ணுரிமை, பெண்கல்வி, ஆணுக்கு பெண் சமம், சாதி எதிர்ப்பு, சங்ககால பெண்கள், பெண் படைப்பாளர்கள், பெண் விடுதலை, முற்போக்கு பகுத்தறிவு, பெண்ணியக்கம், பாலியல் அடையாளங்கள்.*

## முன்னுரை

நமது கலாச்சார செயல்பாடுகள் அனைத்திலும் பெண் இரண்டாந்தர இடம் பெற்றிருக்கிறாள், ஆணுக்கு அடிமையாக இருக்கிறாள் என்பது பெண்ணியக் கொள்கையின் ஒடுக்குமுறை இல்லாமல் ஆக்குவதும் ஆண்களின் பார்வையில் கட்டப்பட்டுள்ள இன்றைய கலாச்சாரத்தை அதாவத ஆணாதிக்கத்தை, தந்தையாதிக்க முறையை இவற்றின் அடிப்படையிலான கருத்துக்களை இல்லாமல் போக்கி பெண்களின் விழைவுகள், நோக்கங்கள் ஆகியவற்றை முழுமையாக ஏற்கும் ஒரு பதிய கலாச்சாரத்தை உருவாக்குவது பெண்ணியத்தின் நோக்கம். பெண்ணியத்திற்குள் எத்தனையோ பிரிவுகள் இருப்பினும் மேற்கண்ட இலக்கு எல்லாவற்றிக்கும் பொதுவானது. புதிதாக உருவாகும் அப்படிப்பட்ட ஒரு சமூகம் எப்படியிருக்கும் என்பதன் கற்பனையிலும் அதனை உருவாக்கக் கையாள வேண்டிய நடைமுறை செயல்பாடுகள் யாவை என நிர்ணயிப்பதிலும் தான் பல்வேறு பெண்ணியக் கொள்கைகளும் வேறுபடுகின்றன. முற்போக்கு பெண் சிந்தனைக் கருத்துக்களைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

## முதல் பெண்ணியச் சிந்தனை நூல்

முதன்முதல் பெண்ணியச் சிந்தனைக்கான சான்றாக நமக்குக் கிடைப்பது 1792இல் மேரி உல்ஸ்டன்கிராஃப்ட் எழுதிய “திவிண்டிகேஷன் ஆஃப் விமன்” என்ற நூல் ஓர் அரசியல் செயல்பாட்டு முறையை அதில் அவர் முன்வைக்கிறார். மேற்கத்தியப் பெண்ணியத்தின் மையமாக அவர் சிந்தனை ஏற்கப்பட்டுள்ளது.

## பெண்ணியத்தின் முதல் நிலை

“உலகமுழுவதுமே பெண்ணடிமைத்தினம் நிலவுகிறது. அதிலும் சாதியமைப்புடைய இந்தியச் சமூகத்தில் பெண்ணடிமைத் தனம் மிகமிக அதிகமாகவே இருந்தது, இருக்கிறது. தொடக்க காலத்தில் ஆண்டுகளுக்கு நிகரான பொருளாதாரம், அரசியல் சமத்துவத்தைப் பெறுவதாகவே பெண்களின் இயக்கங்கள் அமைந்தன”[1] பாலியல் சமமின்மை பற்றி 19ஆம் நூற்றாண்டில் வெளி யான சில நூல்களால் பெண்ணியத்தின் வேகம் அதிகமாகிறது. சான்றுக்கு ஜே.எஸ்.மில் ஹாரியட் டெய்லர்மில் இணைந்து எழுதிய தி சப்ஜெக்சன் ஆஃப் விமன் என்ற நூலைச் சொல்லலாம். பெண்கள் குழுக்கள் பலவும் சமத்துவப் போராட்டத்தில் இறங்கினர். இருபதாம் நூற்றாண்டில் சிவில் உரிமைக் குழுக்களால் பெண்களுக்கு வாக்குரிமை, பொருளாதார சமத்துவம் போன்றவை ஓரளவேணும் கிடைத்துள்ளன. மேலும் சமமான கல்வி தாய்சேய் நலம், சம ஊதியம் போன்ற நிலைகளும் ஏற்பட்டன. பெண்களின் மேம்பாட்டுக்கு சமமான கல்வி, பொருளாதார நிலை அரசியல் சமத்துவம் ஆகியவை அடிப்படை என்பது எங்கும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அடிப்படை இவற்றிற்ககைப் போராடுவதையும் பெண்கள் மட்டுமே செய்ய வேண்டும் எனக் கருது பவர்கள் பலர் உண்டு. இதுவே பெண்ணியத்தின் முதல் நிலையாகும்.

## பெண்ணியத்தின் இரண்டாம் நிலை

பெண்ணியத்தின் இரண்டாம் நிலையாக, பெண்ணாக இருக்கும் நிலை என்பது இயற்கையான ஒன்றல்ல என்ற விஷயத்தை ஏற்றுக்கொள்வதும் புரிய வைப்பதும் அமைந்தன. உலகில் எந்த ஒன்றின் மேலாண்மையும் இயல்பானதல்ல. ஆணாதிக்கமும் இயல்பான ஒன்றல்ல. எனவே, அதை மாற்றமுடியும் மாற்ற வேண்டும் என்ற உறுதி ஏற்படுகிறது. பாலியல் அடையாளங்களும் அவற்றிற்கான கலாச்சாரச் செயல்பாடுகளும் மொழி, கலாச்சார அமைப்புக்களால் உருவானவை. சான்றாக, பெண் பூப்படைவது ஒரு பாலியல் அடையாளம். அதற்கான கலாச்சார செயல் பாடுகளாக நீராட்டு விழா எடுத்தல்,

தனியே அமரச்செய்தல், மாமன்மார்சீர் செய்தல் போன்றவை நமது கலாச்சார அமைப்பினால் உருவான விசயங்கள் இது உலகப்பொதுவானதல்ல. சான்றாக, ஐரோப்பிய நாடுகளில் இத்தகைய நிலை கிடையாது. ஆண்மை, பெண்மை என்பவற்றிற்கான அடையாளங்கள், இப்படி நடந்து கொள்ளவேண்டும், பழக வேண்டும் என்பன போன்ற கட்டளைகள் கலாச்சாரத் தினால்தான் அளிக்கப்படுகின்றன.

## இந்தியாவில் பெண்ணியம்

இந்தியாவில் முதலில் சீர்திருத்த இயக்கங்கள் தான் தோன்றின உதாரணமாக, சதி அல்லது உடன்கட்டை ஏறுதல் என்ற வழக்கத்தைக்கைவிட வேண்டி இராஜாராம் மோகன்ராய் போராடி அதற்கான சட்டத்தைக் கொண்டு வந்தார். பலதார மண எதிர்பபு, பெண்கல்வி, பெண்களுக்குச் சொத்துரிமை ஆகியவை குறித்தும் அவர் போராடியிருக்கிறார். மக்களின் உரிமைகள் பற்றியும், மக்களில் சரிபாதித் தொகையினரான பெண்களின் உரிமையற்ற நிலை பற்றியும் விழிப்புணர்ச்சி தோன்றிய போது, பெண்ணியமும் எளிய வடிவில் தோன்றிவிட்டது. தேசியப்போராட்டம் தீவிரமடைந்த காலத்தில் பெண்கள் சார்ந்த விழப்புணர்ச்சியும் ஏற்பட்டது.

தமிழ் இலக்கியங்களிலும் பெண்ணை அடிமைப்படுத்தியே இருந்துள்ளனர். சங்க காலத்திலும் பெண்ணடிமைத்தனம் வேரூன்றியிருந்ததை "வினையே ஆடவர்க்கு உயிரே" போன்ற பாடல்கள்மூலம்நாம்அறிந்திருக்கின்றோம். இருபதாம் நூற்றாண்டில் நாவல்களில் பெரும்பாலும் பெண்கள் பாதுகாக்கப்படுபவள், வீட்டைப்பேணுபவள், தெய்வம் போன்றவள் என்றுதான் படைக்கப்பட்டிருக்கிறாள் என்றும் பெண்ணெழுத்தில் தெருவித்துள்ளனர். "விதவை மறுமணம்", பலதார மணத்தடை, சாதி ஒழிப்பு, குழந்தை மண எதிர்ப்பு, முகத்திரை ஒழிப்பு, பெண்கல்வி, சட்ட ரீதியான சமத்துவம் போன்றவை நிகழ்வதற்கான சாத்தியப்பாடுகள் பற்றிப் பெரிதும் அக்காலத்தில் பேசப்பட்டது."[2]. விதவை மறுமணத்திற்காகப்பாடுபட்டவர்களில் முக்கியமானவர் ஈசுவர சந்திர வித்தியசாகர். குழந்தை திருமணத்திற்கு எதிராகப் போராடியவர்களில் முக்கியமானவர் கேசவ சந்திரசேன். இப்படிப் பெண்களுக்கான போராட்டங்களில் முதன்முதலில் ஆண்களே ஈடுபட வேண்டியதாயிற்று.

## 1980க்குப் பின் தோன்றிய மகளிர் அமைப்பு

- தன்னுரிமை அமைப்புகள்
- வெகுஜன அமைப்புகள்
- பெண்களுக்கு உதவி புரிய என ஏற்பட்ட அமைப்புகள்
- தொழில் முறைச்சங்கங்கள்
- அரசியல் கட்சிகளின் மகளிர் பிரிவுகள்
- பெண்களின் பிரச்சனைகள் குறித்து ஆராய்கின்ற குழுக்கள்

புதிய மார்க்சிய இயக்கங்கள் உருவாக்கிய பெண் குழுக்கள் பெண்ணடிமைத்தனத்திற்கு எதிராகப் போராடி வருகின்றன. பெண்களின் முற்போக்கு அமைப்பு, சமத்துவத்திற்கான பெண் போராளிகள் குழு போன்றவை இப்படிப்பட்டவை. "சில சமயங்களில் தொழிலாளர்கள் பழங்குடிமக்கள், சாதி எதிர்ப்பு அமைப்புகள் இவற்றோடும் பெண்கள் இணைந்து போராடியுள்ளனர்"

## தமிழ் இலக்கியங்களில் பெண்கள்.

உலகிலுள்ள பிற எல்லா இலக்கியங்களையும் போலவே தமிழ் இலக்கியங்களும் பெண்ணை அடிமைப்படுத்தியே நோக்கியுள்ளன. சங்க காலத்திலும் பெண்ணடிமைத்தனம் வேரூன்றியிருந்ததை "வினையே ஆடவர்க்கு உயிரே, மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்" போன்ற பாக்கள் தெளிவுறுத்துகின்றன. ஆனால் பிறமொழி இலக்கியங்களோடும் ஒப்பீட்டு நிலையில் பார்க்கும் போது, சங்க காலத்தில் பெண்கள் மிகுதியாகவே கல்வி கற்றிருந்தனர், சங்ககால பெண்கள்

புலவர்களாகவும் பாடினிகளாகவும் விறலியராகவும் விளங்கினர் என்பதை அறிய முடிகிறது. சங்கக்கவிதையில் பெண்குரலின் பதிவுகள் ஆழமாக இருக்கின்றன. ஔவை என்ற ஓர் மகா ஆளுமையை அதில் நாம் காண்கிறோம். இன்னும் ஆதிமந்தி, வெள்ளிவீதி, இப்படி பலபேர் ஞாபகத்திற்கு வருகிறார்கள்.

## இருபதாம் நூற்றாண்டு இறுதியில் பெண்கள் எழுத்து

இருபதாம் நூற்றாண்டில் நாவல்களில் பெரும்பாலும் பெண் பாதுகாக்கப்படுபவள், சுகத்தைத்தருபவள், தீர்மானங்களைக்கேட்டு கொள்பவள், அடக்கமானவள், அழகு சாதனங்களுக்கானவள், வீட்டைப்பேணுபவள், தெய்வம் போன்றவள், என்று தான் படைக்கப்பட்டிருக்கிறாள். இதில் பாரதிதாசனும் வேறுபடவில்லை. அவரது கருத்துகளும் பெண்ணடிமைத்தனத்திற்கு ஒத்துச்செல்வனவாகவே அமைந்துள்ளன. குடும்ப விளக்கு, இருண்டவீடு போன்ற அவரது கவிதைகள் இதை உணர்த்துகின்றன.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அம்பை என்னும் எழுத்தாளர் மிகத் தீவிரமான பெண்ணிய நிலைப்பாடு கொண்டு சிறுகதைகளை எழுதியுள்ளார். வீட்டின் மூலையில் ஒரு சமையலறை, கருப்புக்குதிரை சதுக்கம் போன்ற அவரது சிறுகதைகள், பெண்ணின் விடுதலைக்கான வெளி ப்பாடுகளாக அமைந்துள்ளன.

## முற்போக்கு சிந்தனை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்லும்

பட்டம் பெறும் மாணவர்கள் முற்போக்குச் சிந்தனையுடன் செயல்பட்டால் உயர்ந்த நிலையை அடையலாம் என்றார், சென்னை டிவிஎஸ் குழும செயல் இயக்குநர் என்.ரவிச்சந்திரன். திருவாரூர் அருகே மஞ்சள் குடியில் உள்ள சுவாமி தயானந்த கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 11வது பட்டமளிப்பு விழாவில் அவர் ஆற்றிய உரை, கல்வி என்பது காசுக்காக, வேலைக்காக பெறுவது அல்ல, உண்மையான மனிதவள மேம்பாட்டை உருவாக்குவதற்காக ஏற்படுத்தப்பட்டதே கல்வி. பட்டங்களை பெறும் மாணவர்கள் உயர்ந்த குறிக்கோள்கள் உடையவர்களாக விளங்க வேண்டும். சிறந்த தொழில் முனைவோராக வர தங்களின் தனித் திறன்களை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

எந்தவொரு செயலையும் முழு ஈடுபாட்டுடன் செய்ய பழக வேண்டும். இளைஞர்களின் சக்தி அளவிட முடியாதது. அதை தீய வழியில் செலவிடாமல் நல்வழிக்கு பயன்படுத்த வேண்டும். வாழ்வில் ஒவ்வொருவரும் தன்னை முதலில் அறிந்து கொள்ள வேண்டும். முற்போக்கு சிந்தனை, உண்மையான உழைப்பு, கடமையை சரி வர செய்தல், மற்றவரை பழி கூறாமல் இருந்தல், உறுதியுடன் இருத்தல், ஆகியவை ஒருவரை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்லும். நமது நாட்டு மக்களிடம் ஏராளமான ஆற்றல் புதைந்து கிடக்கிறது. அதை ஒவ்வொருவரும் சரியாக வெளி ப்படுத்தும் போது இந்தியா வல்லரசாக விரைவில் மாறுவது உறுதி என்றார் இரவிச்சந்திரன்.

## கல்வியின் மூலம் முற்போக்குச் சிந்தனைகளை வளர்த்தல்

பெண்கள், பெண் படைப்பாளர்கள் தான் கற்ற கல்வியின் மூலம் சமூகத்தில் தனக்கென ஓர் அடையாளத்தை அமைத்துக் கொள்கின்றனர். கல்வியின் மூலம் சிந்தித்தல், கருத்துக்களை வெளியிடல், சமூகத்தில் உள்ள அடிமைத்தனத்தை நீக்கி ஆண்களுக்கு சமமாக பெண்களையும் மதித்தல், உயர்வு, தாழ்வு, வேலையில் சமஉரிமை, சொத்தில் சமஉரிமை, உயர்ந்த நிர்வாகத்தில் தன்னை அடையாளப்படுத்துதல் இவை அனைத்தும் பெண்கள் கல்வியின் மூலமாக முற்போக்குச்சிந்தனைகளை வளர்த்துக் கொள்கின்றனர்.

பெண்ணின் "வெளி" வீடு மட்டுமே என்று குறுகிய வரம்புக்குள் சமூகம் அவளை அடைத்த போது அந்த எல்லையை மீறிக்கொண்டு, வரம்புகளை உடைத்துக் கொண்டு கல்வியாலும், தனித்துவ ஆளுமையாலும் அழுத்தங்களை மீறி வந்துவிட விரும்பும் பெண்ணின் சமூகப்போராட்டத்தையே இங்கு எடுத்துக்காட்டுகின்றன. வெறும் அழுகை என்றோ, புலம்பல் என்றோ, ஆற்றாமை, ஏக்க முனகல் ஆகியவற்றை உள்ளடக்கிய குறிப்புகள் என்றோ, புறந்தள்ளிவிட முடியாதபடி, பெண் சார்ந்த சமூக விமர்சனங்களை இவை உறுதியாய் முன்வைக்கின்றன. தன் இருப்பு சார்ந்த கேள்விகளுடனும், முரண்களுடன் இயங்கும் பெண், தன்னை முற்றிலுமாக இச்சமூகத்திலிருந்து துண்டித்துக்கொள்ளாமல் ஒரே வேளையில் அமைப்பின் குரலாகவும்- அதற்கு எதிரான குரலாகவும் ஒலிப்பதன் வெளி ப்பாடுகளே முற்போக்குச்சிந்தனைகள் எனலாம்.

### சிறை மீட்சிக்கான எழுச்சி

பெண்ணின் சுதந்திரமான இயக்கத்தை முடக்கும் காரணிகளை எடுத்துரைப்பதோடு, வற்றிலிருந்து விடுபட்டுத்தனித்துவமுள்ள மனிதப்பிறவிகளாக அவர்கள் தம்மை தாமே உணர வேண்டுமெனவும், சமூகமும் அவ்வாறான அங்கீகாரத்தை அவர்களுக்கு அளிக்க வேண்டுமெனவும், எடுத்துரைக்கும் பெண் படைப்பாளர்களின் ஒட்டு மொத்த தாக்கங்கள் ஆகும்.

பிறரைச் சார்ந்தவர்களாகவும், பிறரைக் களிப்பூட்டும் அழகுப் பொருட்களாகவும் மட்டுமே வாழ்ந்த காலம் மாறி வருவதை முழுமையாக உணர்ந்து விட்ட பெண்கள், அத்தகைய உணர்வு பெறாதோர்க்கு விழிப்பூட்டுவதாக அமைகிறது. "பெண்மொழி: என்பது, பால்சார்ந்த தனி அடையாளங்களை உடையது என்றும், "பெண் உடல், பெண் பாலிய உறவு, தாய்மை இவைகளை வெளி ப்படுத்தும் மொழி பெண்மொழி," என்றும் கூறப்படும். அண்மைக்காலச் சிந்தனைப் போக்குகளின் எதிரொலிகளையும் பெண்களை இன்று காணமுடிகிறது. உடற்கூற்று அடிப்படையில் பெண்கள் படும் அவதிகளையும், அதை ஒட்டி அவளுக்குள் விளையும் உளவியல் தாக்கங்களையும் தயக்கமின்றி வெளிப்படையாக கூறப்பெண்கள் முன் வந்திருப்பதே முற்போக்கு சிந்தனைகளின் அடையாளம் ஆகும்.

### முற்போக்கு சிந்தனையில் பெண்ணின் எதிர்மறை வடிவம்

அறியாமையே அணிகலனாய் கொண்டு சார்புநிலையில் ஒடுங்கி வாழ்பவளாகக் காணப்பட்ட பெண், கதைகள் பலவற்றிலும் அறிவு நுட்பம் வாய்ந்த சாமாத்தியக்காரியாக, ஆணையே அடக்கி ஆளபவளாக அவனுக்கு சில வேளைகளில் அறிவுரை சொல்லுபவளாகவும் கூட காட்டடப்படுகிறாள்.

"உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு" என்ற கருத்தியல் அடிப்படையில் தன்னை அரைப்பட்டினி போட்டு வந்த அமைப்பை எதிர் கொள்ள ஔவை நோன்புக் கதையைப் புனைந்து தன்னைக் காத்துக் கொள்கிறாள் பெண். கூட்டுக்குடும்ப அமைப்பில் தன்னை நிம்மதியாக வாழவிடாத மாமியாரைப் பல வழிகளிலும் தந்திரமாகச் சமாளிக்கிறாள். பெண் கல்விகற்று சமூகத்தில் சமாளிக்கிறாள். பெண் கல்வி கற்று சமூகத்தில் ஒளி விளக்காகத் திகழும் போது அவள் ஆண்களுக்கு நிகராக சமூகத்தில் வானளவில் உயர்ந்து நிற்கிறாள். "பெண்கள் கல்வி என்ற ஆயுதத்தால் மட்டுமே சமூக மடமைகளை உடைத்தெறிய முடியும் எனறு பாரதிதாசன் கூறியுள்ளார்"[4].தன்னுடைய உழைப்பை இடையறாது சுரண்டி வைத்த ஆண் சமூகத்தை மாவாட்டவும், நெல் குத்தவும், அம்மியில் மசாலா அரைக்கவும், அடுப்பெரிக்கவும் வைத்து ஆனந்தம் கொள்கிறாள். பாலியல் சீண்டல்களைப் பயமின்றி எதிர்கொள்வதோடு, அத்தகைய

ஆண்களை அடுப்புச் சுளையில் பொசுக்கவும் முற்படுகிறாள். கல்லானாலும் கணவன் என்றுபணிந்து கொண்டிருந்த நிலையைத் தன் காலடியில் வணங்குமாறு செய்கிறாள். கணவனது பிறபெண்டிர் தொடர்பைத் தந்திரமாய் எதிர்கொண்டு வீட்டுச் சொத்து அங்கே போய்ச குவிக்கப்படுவதைச் சாமர்த்தியமாய்த் தடுக்கிறாள். சமூக இன்னல்களை உடைத்தெறிய கல்வி என்ற முற்போக்குச் சிந்தனையால் மாற்ற முடியும்.

"பெண்ணின் அடிமன ஆழத்தில் புதைந்திருக்கும் சுதந்திர வேட்கைதான் இப்படிப் பல நிகழ்வுகளை சொல்லி மகிழ்ச்சியுறுகிறது" என்று எழுத்தாளர் திரு.கி.ராஜநாராயணன் குறிப்டபிடுகிறார்.

"ஆணுக்குரியதாகச் சமூகம் பேசும் பண்புகளைப் பெற்றிருப்பவளாக, வீரம் கொண்டவளாக, அரசை நிருவாகம் செய்பவளாக, ஆண் அரசுகளை வெற்றி கொள்பவளாக, வீமன், கண்ணன் ஆகியோரைக் கூடப் புறங்காட்டச் செய்யும் வல்லமை படைத்தவளாக அவள் காட்டப்படுகிறாள். அவள் படையெடுத்து வருகையில் அர்ச்சுனனே அஞ்சி நடுங்குகின்றான் என்று புராணங்கள் கூறுகிறது. அச்சம் காட்டும் அவன், அவளைக் கையெடுத்துக் கும்பிடுகிறான்".[5] இவை கல்வி, வீரம் என்ற பண்புகளால் வானோக்கி உயர்ந்து நிற்கிறாள்.

## முடிவுரை

கல்வியறிவு பெற்றால் மட்டுமே பெண்கள் முற்போக்குச் சிந்தனையை சமூகத்தில் வெளிக்கொணர முடியும். "கல்வி என்ற ஒளிக்கதிர் இருளை அகற்றுவது போல, பெண்களின் அறியாமையைப் போக்க கல்வியறிவுள்ள முற்போக்கு சிந்தனைகளால் மட்டுமே உடைத்தெறியமுடியும்"[4]. சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகளை நீக்கிட, சமத்துவத்தை நிலை நாட்ட, ஒற்றுமையை வலியுறுத்திட, வேற்றுமைத் தாழ்வுகளை அகற்றிட, எழுத்தறிவுள்ள முற்போக்குச் சிந்தனைகளால் மட்டும் பெண்கள் சமூகத்தில் முத்திரைப்பதிக்க முடியும். பெண்கள் யாருக்கும் அடிமையில்லை என்றும், கல்வியால் சமூகத்தை ஆளக்கூடிய ஒரு அங்கமாகத் திகழ்பவள் பெண்மை என்றும் தந்தை பெரியார் கூறியுள்ளார். கல்வியறிவால் சமூகத்தை மாற்றக்கூடிய வித்து பெண்கள் என்றும், பெண்களே குடும்பத்தில் ஒளி விளக்கு என்றும், பெண்களே குழந்தைகளை சிறந்த பண்பாளராக மாற்றி சமூகத்தின் விழுதுகளாக தாங்கி நிற்பவர்கள் என்று பாரதிதாசனும் கூறியுள்ளார். பெண்களே நாட்டின் இரு கண்கள் என்று பாரதியார் கூறியுள்ளார்.

## தொகுப்புரை

நமது கலாச்சாரம் செயல்பாடுகள் அனைத்திலும் பெண் அங்கமாகச் செயல்படுகிறாள்.

தொடக்க காலத்தில் ஆண்களுக்கு நிகரான பொருளாதாரம், அரசியல் சமத்து வத்தையும் பெறுவதாகவே பெண்களின் இயக்கங்கள் அமைந்தன.

மக்களின் உரிமைகள் பற்றியும், மக்களில் சரிபாதித்தொகையினரான பெண்களின் உரிமையற்ற நிலை பற்றியும் விழிப்புணர்ச்சி தோன்றிய போது, பெண்ணியமும் எளிய வடிவில் தோன்றிவிட்டது.

விதவை மறுமணம், பலதார மணத்தடை, சாதி ஒழிப்பு, குழந்தை மண எதிர்ப்பு, பெண்கல்வி, சட்டரீதியான சமத்துவம் போன்றவை பெரிதும் பேசப்பட்டது.

சங்ககாலத்தில் பெண்கள் மிகுதியாகவே கல்வி கற்றிருந்தனர்.

சங்க கால பெண்கள் புலவர்களாகவும், பாடினிகளாகவும், விறலியராகவும் விளங்கினர் என்பதை சங்க இலக்கிய நூல்களில் அறிய முடிகிறது.

இருபதாம் நூற்றாண்டில் பெண் படைப்பாளர்கள் படைப்புகள் மூலம்,

எழுத்தின் வாயிலாகவும், பெண்களுக்கு விழிப்புணர்வை நாவல்கள், சிறுகதைகள் மூலம் வெளிப்படுத்தினர்.

பெண்களின் அறியாமையைப் போக்க கல்வியறிவுள்ள முற்போக்கு சிந்தனைகளால் மட்டுமே உடைத்தெறிய முடியும்.

## அடிக் குறிப்புப் பட்டியல்

1. பெண்ணியம், பேராசிரியர் ஜே.தர்மராஜ், டாக்டா.த.எபிஜேம்ஸ், மூன்றாம் பதிப்பு 2018, டென்சி பப்ளிகேஷன்ஸ், சிவகாசி - 626123. பக் 96,97,99,101
2. பெண்களும் மதச்சார்பின்மையும், மைதிலி சிவராமன், முதற்பதிப்பு ஜீலை 1993, அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம் சார்பில், சவுத் ஏசியன் புக்ஸ், 6ஃ1 தாயார் சாஹிப் 2வது தெரு, சென்னை - 600 002. பக் -27,28, 30
3. தமிழிலக்கிய வெளி யில் பெண் மொழியும் பெண்ணும், எம்.ஏ.சுசீலா, முதற்பதிப்பு 2006, மீனாட்சி புத்தக நிலையம், மயூரா வளாகம், மதுரை 625001. பக்-63,64, 65
4. தமிழ் இலக்கிய முற்போக்கு ஆய்வு முன்னோடிகள், மூ.ச.சுப்பிரமணியன், முதற்பதிப்பு 2009, பாரதிவுத்தகாலயம், 421 அண்ணாச ாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600018. பக் - 49,50,51,52
5. சங்க இலக்கியமும் பெண்ணியக் கோட்பாடும் - தி.சு.நடராசன், பதிப்பு 2008, நியுசெஞ்சுரிபுக் ஹவுஸ் பி.லிட்- சென்னை - 600098, பக்-67,69,70